**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.**

**CC.No.519/2023 Date: 16.09.2025**

**PW 1 : ராஜா த/பெ குப்புசாமி**

துவக்க நேரம் 03.19 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகளும், நானும் பக்கத்து பக்கத்து காட்டுக்காரர்கள் என்றால் சரிதான். எதிரிகளின் நிலத்திற்கும், எங்களது நிலத்திற்கும் அருகில் மரம் இருப்பது தொடர்பாக எங்களுக்குள் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான்.

2) இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் இரவு 08.30–09.00 மணி இருக்கும் என்றும், அந்த நேரத்தில் வெளிச்சம் எதுவும் இல்லாமல் இருட்டாக இருந்தது என்றும் சொன்னால் சரிதான். எங்கள் இருதரப்பினருக்கிடையே அந்த சமயத்தில் வாக்குவாதம் ஏற்பட்டபொழுது அந்த இடத்தில் நிறைய கூட்டம் கூடிவிட்டது என்று சொன்னால் சரிதான்.

3) அந்த கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் யார், என்னை தள்ளிவிட்டார், யாரால் எனக்கு காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனவும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அந்த கூட்டத்தில் யார், எனது வண்டியை தள்ளிவிட்டு சேதப்படுத்தினார்கள் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் நானும், எதிரிகளும் சமாதானமாகிவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 03.25 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.09.16 17:13:23 +0530

Judicial Magistrate No.2, Attur.